<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்**-2,** கரூர்**.**</u>
<u>முன்னிலை</u> : திரு. எம். சார்லஸ் ஆல்பர்ட், B.Com., B.L.,
நீதித்துறை நடுவர் எண்-2, கரூர்.

**திருவள்ளுவராண்டு 2057, ஸ்ரீ பராபவ வருடம் வைகாசி திங்கள் 18ம் நாள்**
2026-ம் ஆண்டு ஜீன் மாதம் 01-ம் நாள் திங்கள்கிழமை
<u>சுருக்குவிசாரணை வழக்கு எண்**.604/2026**</u>

அரசுக்காக
காவல் உதவி ஆய்வாளர்**,**
வெள்ளியணை காவல் நிலையம்.
**(**காவல்நிலைய குற்ற எண்**. 276/2025).** ... முறையிடுபவர்.

**.../** எதிர்**/...**

திரு**.**முத்துக்கிருஷ்ணன்**,**
த/பெ.பழனிச்சாமி ... எதிரி

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் 26.03.2026-ம் தேதியன்று கோப்பில் எடுக்கப்பட்டு, இன்று வரையில் என் முன்பாக விசாரணைக்கும், எனது பரிசீலனையிலும் இருந்து வந்தும், இறுதியாக 01.06.2026-ம் தேதியன்று அரசு தரப்பில் அரசு வழக்கறிஞர்-நிலை-2 அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தாமாக முன்னிலையாகியும் எதிரி தெரிவித்த ஒப்புதல் மற்றும் ஆவணங்களை பரிசீலித்தும் 01.06.2026-ம் தேதி இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

<u>தீர்ப்புரை</u>

இவ்வழக்கின் புகார்தாரரும், காயம்பட்டவருமான திரு.ரேணுகா என்பவர் 17.09.2025-ந் தேதி இரவு 08.00 P.M மணிக்கு மணப்பாறை - கரூர் செல்லும் ரோட்டில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி உப்பிடமங்கலம் சந்தை வடக்கு கேட் முன்பு ரோட்டை கடந்து நடந்து வந்தவர் மீது மேற்படி ரோட்டில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்த TN 47 BB 3227 என்ற பதிவு எண் கொண்ட Hero Splendor Plus இரு சக்கர வாகனத்தை ஓட்டி வந்த அதன் ஓட்டுநரான எதிரியாகிய நீர், இரு சக்கர வாகனத்தை அதிகவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஓட்டி வந்து மோதி விபத்து ஏற்படுத்தியதில் ரேணுகா என்பவருக்கு இடது கெண்டைக்காலில் கொடுங்காயத்தை ஏற்படுத்தியதாகவும் , எனவே உங்கள் மீது வெள்ளியணை காவல் ஆய்வாளர் உம்மீது ச/பி.281, 125(b) BNS -ன் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும், பா.நா.சு.ச. பிரிவு 230-ன் கீழ் எதிரிக்கு வழங்கப்பட வேண்டிய அரசுதரப்பு வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

3. இருதரப்பும் கேட்டும், இவ்வழக்காவணங்களை ஆராய்ந்தும், எதிரி மீதான குற்ற சாராம்சம் குறித்து எடுத்துக் கூறி வினவிய போது எதிரி குற்றத்தை ஒப்புக்

கொள்கிறேன் எனவும் அபராதம் மட்டும் விதித்து தன்னை விடுதலை செய்யுமாறும் வேண்டினார்.

4. எதிரியின் தன்னிச்சையான குற்ற ஒப்புதலைக் கருத்தில் கொண்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்த வகையிலும் எதிரி மீது ச/பி. 281, 125(b) BNS ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பால் நிரூபிக்கப்பட்டுவிட்டதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

5. முடிவாக எதிரியின் மீது ச/பி. 281, 125(b) BNS-ன் கீழ் குற்றவாளி என்று தீர்மானித்து அவருக்கு வழங்கப்படவிருக்கும் தண்டனை குறித்து வினவியபோது எதிரி குற்றத்தை ஒப்புக் கொள்கிறேன் எனவும், முன் வழக்கு எதுவும் இல்லை என்றும், தண்டனையை குறைத்து தருமாறும் வேண்டினார்.

6. முடிவில், எதிரியின் பதிலைக் கருத்தில் கொண்டு எதிரியின் மீது அரசுத்தரப்பில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டான ச/பி.281, 125(b) BNS நிரூபிக்கப்பட்டு, கீழான குற்றமானது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிருப்பிக்கப்பட்டுள்ளது என முடிவு செய்து எதிரிக்கு 281 BNS -ன் கீழான குற்றத்திற்கு அபராதம் தலா ரூ.**1,000**/-மும், அபராதத்தை கட்டத் தவறினால் 1 வாரம் மெய்க்காவல் சிறை தண்டனையும் மற்றும் பா.நா.சு.ச 2023 பிரிவு 125(b)-ன் கீழான குற்றத்திற்கு அபராதம் ரூ.**10,000**/-மும், அபராதத்தை கட்டத் தவறினால் 8 வாரம் மெய்க்காவல் சிறை தண்டனையும் விதித்து பா.நா.சு.ச பிரிவு 275-ன் கீழ் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. இவ்வழக்கின் மொத்த அபராதம் தொகை ரூ.**11,000/-**

7. எதிரிகளை காவல்துறையினரால் பிணையின் பேரில் விடப்பட்ட பிணையமானது மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னிட்டு தானாகவே ரத்தாகிவிடும் என உத்தரவிடப்படுகின்றது.

8. இவ்வழக்கில் வழக்குச் சொத்தாக எதுவும் குறியீடு செய்யப்படவில்லை என்பதால் அது சம்மந்தமாக எந்த உத்தரவும் பிறப்புவிக்கப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026- ம் ஆண்டு ஜீன் மாதம் 01-ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

M CHARLES ALBERT
Digitally signed by M CHARLES ALBERT
Date: 2026.06.01 11:30:15 +0530

நீதித்துறை நடுவர் எண்.**2**,
கரூர்.